# KAYALPATTINAM MUNICIPALITY

KAYALPATTINAM MUNICIPALITY COUNCIL MONTH OF MAY FORM 3

Minutes of the Meeting held on 31.12.2018

| Date of council meeting | Deceison Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| | 1719 | **மன்றப்பொருள்:1**<br>காயல்பட்டணம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான ஜெராக்ஸ் 03.07.2018 முதல் 08.12.2018 வரை S.R.S.Computer Xerox நிறுவனத்திலிருந்து எடுக்கப்பட்ட வகைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.2309/- மட்டும் மேற்படி நிறுவனத்திற்கு இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1720 | **மன்றப்பொருள்:2**<br>காயல்பட்டணம் நகராட்சி குடிநீர் பிரிவு பயன்பாட்டிற்கு தேவையான உதிரிசாமான்கள் பொருத்துநர் அறிக்கைப்படி வாங்குவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய Sri Vaari Engineering, மதுரை நிறுவனத்திற்கு நிர்வாக அவசர அவசியம் கருதி விநியோக உத்தரவு வழங்கப்பட்டு மேற்படி உதிரிசாமான்கள் வாங்கப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ.185749/- மட்டும் Sri Vaari Engineering, மதுரை நிறுவனத்திற்கு Sec-15-ன் கீழ் வழங்க மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1721 | **மன்றப்பொருள்:3**<br>காயல்பட்டணம் நகராட்சி பொதுசுகாதார வாகனம் எண்:TN69U 6922 –அசோக் லைலன்ட்க்கான 7 டயர்கள் பழுதாகியுள்ளது. மேலும் வாகனம் 2007-ம் ஆண்டில் வாங்கப்பட்டது. 69794 கி.மீ மேல் வாகனம் இயக்கப்பட்டுள்ளது. எனவே புதிய டயர்கள் 7 எண்ணங்கள் வாங்குவதற்கு ஓட்டுநர் அறிக்கையில் கோரியுள்ளார். அதற்கான உத்தேச மதிப்பீடு 73500/-க்கான மதிப்பீடு பட்டியல் வழங்கியுள்ளார். எனவே மேற்படி 7 டயர்கள் வாங்குவதற்கும், அதற்கான பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1722 | **மன்றப்பொருள்: 4**<br>காயல்பட்டணம் நகராட்சியில் புதிய அலுவலக கட்டிடத்தில் ஒவ்வொரு துறை அலுவலர்களுக்கும் தனித்தனியாக இன்டர்காம் இணைப்பு வழங்கிடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.10இலட்சத்திற்கு பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி | நிர்வாக நகன் கருதி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | பெறப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1) M/s Sumartouz Technology<br>Thangachimadam — ரூ. 176750/-(GST வரி நீங்கலாக)<br>Rameshwaram<br><br>2) M/s Dura Security Syestems<br>2/43 Podanur Main Road — ரூ. 182000/-(GST வரி நீங்கலாக)<br>Coimbatore -641023<br><br>3) M/s SIEMTEL communicatioons &<br>business service (P)Ltd — ரூ. 178800/- (GST வரி நீங்கலாக)<br>Josier street, Nungambakkam,<br>Chennai – 34<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s Sumartouz Technology,Thangachimadam,Rameshwaram என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியையும் பணியின் அவசர அவசியம் கருதி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.10 இலட்சத்திற்கு நகராட்சி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றதையும் அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | 1723 | **<u>மன்றப்பொருள்: 5</u>**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொது நிதி பணிகள் 2018-19ன் கீழ் காயல்பட்டணம் நகராட்சியில் சிவன்கோவில் தெரு அக்பர்ஷா நகர் பிரதான சாலை ,முதல் தெரு,இரண்டாம் தெரு மற்றும் மூன்றாம் தெரு சாலைகள் மேம்பாடு செய்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.49.00இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண். 1627 நாள்: 31.07.2018ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் நக.எண். 2984/2018/ஆ1 நாள். 25.08.2018ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு அதன்படி மண்டல செயற்பொறியாளர்,திருநெல்வேலி மண்டலம் அவர்களின் செயல்முறைகள் நக.எண். 2984/2018/ஆ1 நாள். 08.10.2018 ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 12.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1) திரு.எஸ்.குமரேசன்<br>12 வணிக வளாகம்,<br>திருச்செந்தூர்.<br><br>2) திரு.எஸ்.வித்யாசாகர்,<br>நடுவக்குறிச்சி,<br>சாத்தான்குளம்<br><br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் மேற்க்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும் தொழில்நுட்ப தகுதி பெற்று இருந்ததால் அவர்களின் விலைப்புள்ளி உறை 14.12.2018 அன்று திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது.<br>1) திரு.எஸ்.குமரேசன் | குறைந்த ஒப்பந்துபுள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.குமரேசன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்க அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 12 வணிக வளாகம்,<br>திருச்செந்தூர். - மதிப்பீடு ரேட்டை விட 0.02% குறைவு<br><br>2) திரு.எஸ்.வித்யாசாகர்,<br>நடுவக்குறிச்சி,<br>சாத்தான்குளம் - மதிப்பீடு ரேட்டை விட 0.32% கூடுதல்<br>மேற்கண்டவாறு உள்ள ஒப்பந்ததாரர்களில் குறைவான விலைப்புள்ளி (மதிப்பீடு ரேட்டை விட 0.02% குறைவு) கொடுத்துள்ள திரு.எஸ்.குமரேசன்,திருச்செந்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.மேலும் வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி தனி அலவலரின் முன் அனுமதி பெற்று அங்கிகரித்ததையும் பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மன்ற அனுமதிக்கு. | |
| | 1724 | **மன்றப்பொருள்: 6**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொது நிதி பணிகள் 2018-19ன் கீழ் காயல்பட்டணம் நகராட்சியில் வடக்கு முத்தாரம்மன் கோவில் தெரு சாலை முதல் சிவன்கோவில் தெரு மயான இடம் வரை உள்ள சாலையினை மேம்பாடு செய்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.47.00இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண். 1657 நாள்: 27.08.2018ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் நக.எண். 3857/2018/ஆ1 நாள். 28.10.2018ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு அதன்படி மண்டல செயற்பொறியாளர்,திருநெல்வேலி மண்டலம் அவர்களின் செயல்முறைகள் நக.எண். 3857/2018/ஆ1 நாள். 14.11.2018 ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 12.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1) திரு.எஸ்.குமரேசன்<br>12 வணிக வளாகம்,<br>திருச்செந்தூர்.<br><br>2) திரு.எஸ்.வித்யாசாகர்,<br>நடுவக்குறிச்சி,<br>சாத்தான்குளம்<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் மேற்க்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும் தொழில்நுட்ப தகுதி பெற்று இருந்ததால் அவர்களின் விலைப்புள்ளி உறை 14.12.2018 அன்று திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது.<br>1) திரு.எஸ்.குமரேசன்<br>12 வணிக வளாகம்,<br>திருச்செந்தூர். - மதிப்பீடு ரேட்டை விட 0.04% குறைவு<br>2) திரு.எஸ்.வித்யாசாகர்,<br>நடுவக்குறிச்சி,<br>சாத்தான்குளம் - மதிப்பீடு ரேட்டை விட 0.81% கூடுதல்<br>மேற்கண்டவாறு உள்ள ஒப்பந்ததாரர்களில் குறைவான விலைப்புள்ளி (மதிப்பீடு ரேட்டை விட 0.04% குறைவு) கொடுத்துள்ள திரு.எஸ்.குமரேசன்,திருச்செந்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி தனி அலவலரின் முன் அனுமதி பெற்று அங்கிகரித்ததையும் பணிக்கு வேலை | குறைந்த ஒப்பந்தபுள்ளி சமர்ப்பித்துள்ள திரு.எஸ்.குமரேசன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்க அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | உத்திரவு வழங்கியதையும் மன்ற அனுமதிக்கு. | |
| | 1725 | **மன்றப்பொருள்: 7**<br>காயல்பட்டணம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2018-19ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூ.5.00இலட்சம் மதிப்பில் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட 14வது வாடுக்குட்பட்ட பப்பரப்பள்ளி மயான இடத்திற்கு சுற்றுச்சுவர் கட்டி பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவில் நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை ரூ. 13028/-ஐ மக்கள் குரல் நாளிதழுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1726 | **மன்றப்பொருள்: 8**<br>காயல்பட்டணம் நகராட்சியில் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres) அமைத்திட அனுவபம் வாய்ந்த மற்றும் உரிய தொழில்நுட்ப நுணுக்கங்களைக்கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் "Expression of Interest" விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக அறிவிப்பினை் நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை ரூ.7896/-ஐ தினபூமி நாளிதழுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1727 | **மன்றப்பொருள்:9**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 8வது வார்டுக்குட்பட்ட தீவுத்தெரு சாலை தார்ச்சாலையாக அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டதால் பெருமளவில் சேதமடைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல மிகுந்த சிரமம் ஏற்படுவதால் அச்சாலையை தார்ச்சாலையாக மேம்பாடு செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.16.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1728 | **மன்றப்பொருள்:10**<br>காயல்பட்டணம் நகராட்சி 14வது வார்டுக்குட்பட்ட கீழலட்சுமிபுரம் பிரதான சாலை (அரசு மாணவர் விடுதி வரை) செல்லும் சாலை தார்ச்சாலையாக அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டதால் பெருமளவில் சேதமடைந்து பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல முடியாத வையில் இருப்பதாலும் அப்பகுதியில் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாலும் அத்தார்ச்சாலையினை மேம்பாடு செய்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.31.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1729 | **மன்றப்பொருள்: 11**<br>காயல்பட்டணம் நகராட்சி புதிய பேருந்து நிலைய வளாகத்தில் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் சிமெண்ட் கல்பதித்து தளம் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது | அனுமதிக்கப்பட்டது |
| | 1730 | **மன்றப்பொருள்: 12**<br>காயல்பட்டணம் நகராட்சி 14வது வார்டுக்குட்பட்ட கீழலட்சுமிபுரம் மேலத்தெரு சாலை (சந்திப்பிலிருந்து) மற்றும் குறுக்கு தெரு சாலைகள் தார்ச்சாலையாக அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டதால் பெருமளவில் சேதமடைந்து பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல முடியாத வையில் இருப்பதாலும் அப்பகுதியில் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாலும் அத்தார்ச்சாலையினை மேம்பாடு செய்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.34.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1731 | **<u>மன்றப்பொருள்: 13</u>**<br>காயல்பட்டணம் நகராட்சி புதிய பேருந்து நிலைய வளாகத்தில் சுற்றுச் சுவர் கட்டுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.80இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது. பாதுகாப்பு நலன்கருதி அவசியப்படுவதால் உடனடியாக வேலை செய்யலாம் |
| | 1732 | **<u>மன்றப்பொருள்: 14</u>**<br>நகராட்சி பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடங்களை மேம்பாடு செய்து பல்நோக்கு கட்டிடமாக மாற்றி அமைத்தல் பணி செய்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1733 | **<u>மன்றப்பொருள்: 15</u>**<br>நகராட்சி சின்ன நெசவுத்தெரு சாலையினை சிமெண்ட் கல் பதித்து சாலை அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1734 | **<u>மன்றப்பொருள்: 16</u>**<br>கடையக்குடி உரக்கிடங்கில் இயற்கை காய்கறித் தோட்டம் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 9.50இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1735 | **<u>மன்றப்பொருள்: 17</u>**<br>நகராட்சிக்கு சொந்தமான தார்சாலைகளை வருடாந்திர பராமரிப்பு செய்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 5.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1736 | **<u>மன்றப்பொருள்: 18</u>**<br>நகராட்சிக்கு சொந்தமான சிமெண்ட் சாலைகள் மற்றும் சிமெண்ட் பேவர் பிளாக் சாலைகளை வருடாந்திர பராமரிப்பு செய்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 5.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1737 | **<u>மன்றப்பொருள்: 19</u>**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பல்வேறு பகுதிகளில் புதியதாக தெருவிளக்குகள் அமைக்க வேண்டி பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளது.மேலும் புதியதாக தெருவிளக்குகள் அமைக்க கோரி மாவட்ட ஆட்சியரிடத்திலும் பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளதாலும் மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி அவர்களின் அறிவுரைப்படி பொதுமக்களுக்கு பயன்படக்கூடிய வகையில் குடியிருப்புகள் உள்ள பகுதிகளுக்கு பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி தேவையான இடங்களில் தெருவிளக்குகள் புதியதாக அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியதின்படி நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்கள் நகராட்சியின் தெருவிளக்கு தேவையான இடங்களை நேரடியாக ஆய்வு செய்து வழங்கப்பட்ட அறிவுரையின்படி குடியிருக்கும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை நகராட்சியின் மூலம் செய்து கொடுக்கவேண்டியிருப்பதால் நகராட்சியில் தெருவிளக்கு தேவையான பகுதிகளை கண்டறிந்து அதில் தேவையான தெருவிளக்குகளை புதியதாக அமைத்திட தயரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.92இலட்சத்திற்கும் இதற்கு ஏற்படும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | பொதுமக்களின் நலன்கருதி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1738 | **<u>மன்றப்பொருள்: 20</u>**<br>காயல்பட்டணம் நகராட்சியின் புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்படுவதாலும் நகராட்சியில் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் வழங்கிட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுவதாலும் இரவும் பகலும் தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து மின் மோட்டார் இயக்கப்பட்டு குடிநீர் நகராட்சியின் பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 19 எண்ணம் மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் நிரப்பப்பட்டு அதன் மூலம் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் வழங்க தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுக்கவும் இரவு நேரங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் ஏற்றப்படும் குடிநீர் அளவினை குடிநீர் விநியோகப்பணியாளர்கள் சரிபார்த்திடும் வகையில் ஒவ்வொரு மேல்நிலைநீர்த்தேக்கத்தொட்டி வளாகங்களில் மின் விளக்கு வசதி செய்து கொள்ளவும் மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால் மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைந்துள்ள இடங்களில் பாதுகாப்பு நலன் கருதியும் இரவு நேரங்களில் எளிதாக மேல் நிலைநீர்த்தேக்கத்தொட்டிகளை பார்வையிடும் வகைக்கும் மின் விளக்குகள் அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கும் அதற்குரிய செலவினத்தை நகராட்சி குடிநீர் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | குடிநீர் சப்ளை பாதுகாப்பு கருதி பணி செய்ய அனுமதிக்கப்பட்டது |
| | 1739 | **<u>மன்றப்பொருள்: 21</u>**<br>காயல்பட்டணம் நகராட்சியில் அனைத்து மதத்தைச்சார்ந்த பொதுமக்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். இங்கு எல்லா மதத்திற்கான வழிபாட்டுத்தலங்கள் இருந்தாலும் இஸ்லாமிய வழிபாட்டுத்தலங்கள் அதிக அளவில் உள்ளது. அனைத்து மத பொதுமக்களின் வழிபாட்டுத்தலங்களில் இரவு நேரங்களிலும் வழிபாடு செய்யப்படுவதாலும் நோன்புக்காலங்களில் மசூதிகளில் அதிகமான வழிபாடு நடப்பதாலும் அனைத்து மத வழிபாட்டுத்தலங்களின் முன் பகுதியில் அதிக வெளிச்சமுள்ள தெருவிளக்குகளை பொருத்திடவும் நகராட்சியின் முக்கியமான சாலைகளில் பொதுமக்களின் நலன் கருதி தெருவிளக்குகளை கூடுதலாக பொருத்திடவும் நடவடிக்கை எடுத்திட நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதின்படி மேற்கண்டவாறு தெருவிளக்ககளை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.95இலட்சத்திற்கும் இதற்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | பொதுமக்கள் நலன் கருதி அனுமதிக்கப்பட்டது |
| | 1740 | **<u>மன்றப்பொருள்:22</u>**<br>காயல்பட்டணம் நகராட்சி பொதுசுகாதார வாகனம் எண்:TN69AT 2821 –டம்பர் பிளேசர் வாகனத்திற்கு 7 டயர்கள் பழுதாகியுள்ளது. மேலும் வாகனம் 2013-ம் ஆண்டில் வாங்கப்பட்டது. 100717 கி.மீ மேல் வாகனம் இயக்கப்பட்டுள்ளது. எனவே புதிய டயர்கள் 7 எண்ணங்கள் வாங்குவதற்கு ஓட்டுநர் அறிக்கையில் கோரியுள்ளார். அதற்கான உத்தேச மதிப்பீடு 73500/-க்கான மதிப்பீடு பட்டியல் வழங்கியுள்ளார். எனவே மேற்படி 7 டயர்கள் வாங்குவதற்கும், அதற்கான பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | பொதுமக்கள் சுகாதார நலன் கருதி அனுமதி வழங்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1741 | **<u>மன்றப்பொருள்:23</u>**<br>காயல்பட்டணம் நகராட்சி பொதுசுகாதார வாகனம் எண்:TN69S0761 ஆட்டோக்கு பழுதுகள் சரிசெய்து வழங்க ஓட்டுநர் அறிக்கை வழங்கியுள்ளார். அதன்படி மேற்படி பழுதுகள் ஒப்பந்தப்புள்ளி கோரி சரிசெய்வதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.60000/- மட்டும் என மதிப்பீடு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1742 | **<u>மன்றப்பொருள்:24</u>**<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக ஆட்டோ மூலம் ஒலிபெருக்கி விளம்பரம் மேற்கொள்வதற்கு நிர்வாக அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.<br><br>வ.எண் — நிறுவனத்தின் பெயர் — தொகை ஒரு நாளைக்கு (ரூ)<br>1 — சன் சவுண்ட் சர்வீஸ்,காயல்பட்டணம் — 2550/-<br>2 — ஸ்ரீ சிவ சக்தி சவுண்ட் சர்வீஸ், ஆறுமுகநேரி — 2650/-<br>3 — ஸ்ரீ மாரி சக்தி சவுண்ட் சர்வீஸ், ஆறுமுகநேரி — 2750/-<br><br>மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்:2 (ம) 3-ஐ விட வரிசை எண்:1 சன் சவுண்ட் சர்வீஸ், காயல்பட்டணம் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்திற்கு நிர்வாக அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதையும், அதற்கான பட்டியல் தொகை 3 நாட்களுக்கு ரூ.7650/- மட்டும் மேற்படி நிறுவனத்திற்கு இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1743 | **<u>மன்றப்பொருள்:25</u>**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சிசட்டம் 1920 விதி எண்.15 ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளும் அதற்கு வழங்கப்பட்ட செலவினப்பதிவேடுகளும் மன்றத்தின் பார்வைக்கு. | அனுமதிக்கப்பட்டது |